கீழமை மாவட்ட நீதிமன்றம் ... மற்றும் மாற்று திறனாளி நீதிபதி அவர்கள்
மாவட்ட மாற்று திறனாளி நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம்

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMILNADU POLICE

C 8319484

1. District: இராமநாதபுரம் PS: உலகனேரி Year: 2025 FIR No: 15/2025 Date: 23-7-2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதஅ எண் நாள்

2. (i) Act சட்டம்: உரிமை (திருத்தம்) 2015 Sections பிரிவுகள்: 7(A) உரிமை நடப்பு
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: திருத்தச் சட்டம்.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : 04-03-2022 Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 23/07/2025 Time : 18.15 மணிக்கு
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) VOL - II Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளை
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் W.P.(MD).No.29535/2024
நாள்:- 15-05-2025.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: தி.மலர் 110 கிமீ தென்கிழக்கில்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : மதுரை மாநகர ஆற்றுப்பாதை அலுவலகம், மதுரை.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : தி.கோபிநாத் (b) Father's/ Husband's Name : சிவபா நாயக்கர்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 61/2025 (d) Nationality : இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : வியாபாரம் (g) Address : No. 1/10, தெற்கு ரத வீதி, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. ரெனி. ரோய் அய்னாஸ், மதுரை மாநகர ஆற்றுப்பாதை - அலுவலகம், மதுரை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P.(MD).No. 29535/2024 உத்திரவின் பிரகாரம் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்கள் அலுவலக எண். Petition No. 15443/2024/POL/RM Dt: 22.07.2025 ன் படி, கடந்த 21.11.2024 ஆம் தேதியிட்ட மனுதாரர் கனகராஜ் த/பெ சுப்பா நாயக்கர் என்பவரின் புகார் மனுவினை பார்வையிட்டு, இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் (ந.இராஜேஸ்வரி) இன்று 23.07.2025 ஆம் தேதி 10.15 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 15/2025 பிரிவு 7(a)ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் எதிரி ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 பிரிவு 2(c) ன்படி பொது ஊழியராவர். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் கனகராஜ், வயது 58/2022 த/பெசுப்பாநாயக்கர், No.1/10, தெற்கு ரதவீதி, இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம், செல்நம்பர். 9344120800 பெறுநர்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் தாதையன்னி..... பதவி ADSP..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு மதுரை உறுதுகளில்..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23-7-2025 - 18.50 மணி.

Name: பெயர் N. இராஜேஸ்வரி
Rank: நிலை ..... No. எண் .....
சார்பு ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு,
இராமநாதபுரம் மாவட்டம்.

உயர்திரு.இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்புத்துறை, எண். 293, MKN Road, ஆலந்தூர், சென்னை 600 016. அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவில் அருகே சிவா லாட்ஜ் மற்றும் டீக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 09.07.2021 ஆம் தேதி மதுரை மாநகர் காவல் துறை ஆணையர் அவர்களிடம் என் மகன் சிவக்குமாருக்கு அரசு வேலை வாங்கித்தருவதாக கூறி என்னிடம் மதுரையில் வைத்து ரூ.90,00,000/- (தொண்ணூறு லட்சம்) பெற்றுக் கொண்டு மோசடி செய்து விட்டதாக கணேசன் மற்றும் பிரசாத் அவர்கள் குடும்பத்தார் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கூறி புகார் கொடுத்திருந்தேன். அந்த புகார் மனு மதுரை C.C.B க்கு மாற்றப்பட்டு உதவி ஆய்வாளர் திரு.முரளி முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. ஆரம்பம் முதலே முரளி அவர்கள் எதிரிகளிடம் கையூட்டு (Bribe) பெற்று விட்டு எங்கள் மனு மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் எதிரிக்கு ஆதரவாக இருந்து வருகிறார். கடந்த 04.03.2022 அன்று CCB உதவி ஆய்வாளர் அவரது தொலைபேசியில் இருந்து எனக்கு போன் செய்து எதிரி பிரசாத் மீது FIR போடவேண்டாம் அடுத்த முறை நீங்கள் காவல் நிலையம் வரும் போது உங்களது முழுப்பணத்தையும் நான் எதிரியிடமிருந்து வாங்கி கொடுத்து விடுகிறேன் எனக்கூறினார். நானும் காவல் நிலையம் வருகிறேன் என்று கூறினேன். அடுத்த 2 நிமிடங்களில் உதவி ஆய்வாளர் செல்போனில் இருந்து எனக்கு மீண்டும் அழைப்பு வந்தது. அப்போது உதவி ஆய்வாளர் என்னிடம் பேசவில்லை. ஆனால் அவர் எதிரி பிரசாத்திடம் பேசிக் கொண்டு இருந்தார். அப்போது தான் அவர் தவறுதலாக எனக்கு போன் செய்து விட்டார் என்று தெரிய வந்தது. உதவி ஆய்வாளர் முரளி அவர்கள் எதிரி பிரசாத்திடம் அடுத்த முறை அவர்களை வரச்சொல்லி விட்டேன். கண்டிப்பாக உங்களுக்கு சாதகமாக முடித்து தருகிறேன் எனவும் அதற்கு எதிரி பிரசாத் உதவி ஆய்வாளர் முரளியிடம் ரூ.10,000/- லஞ்சம்(Bribe) கொடுத்தார். அதற்கு உதவி ஆய்வாளர் உங்களுக்கு நான் நிறையா செய்திருக்கிறேன் எனக்கு இந்த ரூ.10,000/- பத்தாது மேலும் ரூ.5,000/- தாருங்கள் என எதிரி பிரசாத்திடம் கேட்டார். அதற்கு எதிரி பிரசாத் அடுத்த முறை வரும் போது கண்டிப்பாக நீங்கள் கேட்ட பணத்தை கொடுத்து விடுகிறேன் என்றும் எனக்கு சாதகமாக இதை முடித்து விடுங்கள் எனக்கூறினார். அவர்கள் இருவரும் உரையாடியது எனது செல்போனில் பதிவாகி உள்ளது. ஆகையால் நான் என் புகார் மனுமீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி மதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் வழக்கு

தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேலும் உதவி ஆய்வாளர் முரளி மற்றும் எதிரி பிரசாத் ஆகிய இருவரும் உரையாடிய ஒலி நகலை இத்துடன் இணைத்துள்ளேன் என்று கூறி கடந்த 15.07.2022ஆம் தேதியன்று புகார் மனு அனுப்பியும் இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானும் எனது மனு விசாரணை நடைபெறும் எனது தரப்பை நிரூபிக்க தேவையான ஆவணங்களுடன் இருந்தேன். ஆனால் இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக எனது புகார் மனுமீது மாண்பு உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை 9/2023 ஆக பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு மீண்டும் உதவி ஆய்வாளர் முரளி கையில் புலன் விசாரணைக்கு உள்ளது. இருந்தபோதும் வழக்கின் எதிரிகளின் முன்ஜாமின் மனுவானது நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டும் எதிரிகளை கைது செய்து விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நான் இதுகுறித்து புகார் மனுவினை கடந்த 06.09.2024ஆம் தேதியன்று புலன்விசாரணை அதிகாரிக்கும், மதுரை கமிஷனருக்கும் அனுப்பிய பிறகு திரு.முரளி, உதவி ஆய்வாளர் என்னை அழைத்து எங்கு போனாலும் இங்கு தான் வரவேண்டும் என்று கூறி அழைக்கழித்து வருகிறார் என்பதால் மேற்படி உதவி ஆய்வாளர் முரளி லஞ்சமாக பணத்தை பெற்றுக்கொண்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தும் பின்பு மாண்பு உயர்நீதிமன்றத்தின் உத்திரவின் படி வழக்கு பதிவு செய்த பிறகும் கூட எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறார். ஆகவே அய்யா அவர்கள் எனது வழக்கை முறையாக விசாரிக்காமல், எதிரியிடம் கையூட்டு (Bribe) பெற்றுக் கொண்டு எதிரிக்கு சாதகமாக இருந்து எங்கள் மனு மீது எந்த மேல்நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வரும் மதுரை CCB உதவி ஆய்வாளர் திரு.முரளி அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஐயா, மேற்படி எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய காவல் ஆணையாளர், மதுரை மாநகரம் அவர்களின் செயல் முறை ஆணை எண்.C.No.C1/e-1100341/347/2025 Dated: 18.07.2025ன் படி 17(a) முன் அனுமதி பெறப்பட்டுள்ளது, மேற்படி புகார் சம்மந்தமாக இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/2025 பிரிவு 7 (a) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018ன் படி இன்று 23.07.2025 தேதி மாலை 18.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன்.

இதன் அசல் மற்றும் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளை W.P.(MD).No. 29535/2024 தேதி 15.05.2025 உத்திரவின் நகல், 21.11.2024 ஆம் தேதியிட்ட மனுதாரரின் மனுவின் நகல் ஆகியவற்றை இராமநாதபுரம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் அவர்களுக்கும், அதன் நகலை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

23.7.25

காவல் ஆய்வாளர்
மகளிர் திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு
இராமநாதபுரம்.